## ஒலிம்பிக்ஸ் காட்டும் வெளிச்சம்!

பாரிஸ் ஒலிம்பிக்ஸ் முடிவுக்கு வந்தது. ஒலிம்பிக் போட்டிகள் நடக்கும்போது பல விமர்சனங்கள், சர்ச்சைகள், ஏமாற்றங்கள் நிகழ்ந்தாலும், உலகில் உள்ள அத்தனை நாட்டு மக்களும் கலந்துகொள்ளும் விளையாட்டுத் திருவிழாவாக இன்றளவும் திகழ்கிறது. எல்லா தளங்களிலும் புறக்கணிக்கப்படும் வடகொரியா ஒலிம்பிக்கில் கலந்துகொண்டு பதக்கங்களைப் பெற்றுள்ளது. தங்கள் நாட்டுப் பெயரை போட்டுக் கொள்ள முடியாதவர்கள், INA (Individual Neutral Athletes) என்ற அணியின் கீழ் சுயாதீனமாகக் கலந்துகொள்ளலாம். இப்படி சர்வதேச அரசியல் எல்லாவற்றையும் கடந்த ஒலிம்பிக் போட்டிகள், பாரிஸ் ஒலிம்பிக்ஸில் சில புதிய எல்லைகளையும் தொட்டுள்ளன. குறிப்பாக, ஆண்களுக்குப் பெண்களும் சம அளவில் கலந்து கொள்வதை பாரிஸ் போட்டி உறுதிசெய்தது, என்கிறார் விளையாட்டுப் பார்வையாளர் கதிர்வேலு.

போட்டிகளின் வரிசைகளில், முதலில் பெண்களுக்கான இறுதிப் போட்டிகளும், அதன் பின்னர், ஆண்களுக்கான இறுதிப் போட்டிகளும் நடக்கும். இந்த முறை அதையும் மாற்றினார்கள். ஆண்களுக்கான போட்டி முதலிலும் பெண்களுக்கான போட்டி அதை அடுத்தும் நிகழந்தன. இது சின்னமாற்றம் போல தோன்றலாம். ஆனால், இதற்கு முன் பல தசாப்தங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரிசையை மாற்றி அமைத்தது. பெண்களுக்கான போட்டியும் முக்கியமானதே என்பதை நடைமுறையில் உணர வைத்தது. பாரிஸ் ஒலிம்பிக்ஸ் இறுதிப்போட்டியாக பெண்கள் மாரத்தானும், அதன் பரிசளிப்பும் ஒலிம்பிக் நிறைவு விழாவில், கிட்டத்தட்ட எண்பதாயிரம் பேர் முன்னிலையில் நடந்தது.

பிரான்ஸ் உட்பட பல நாடுகள் தங்கள் வீரர்கள் போட்டியின் போது ‘ஹிஜாப்’ அணிவதைத் தடை செய்திருந்தன. ஆனால், அந்த நாட்டு வீரர்கள் பதக்கம் பெறும்போது அதை அணிந்திருந்தனர். இப்படிப் பல வெளிச்சத்தை வழங்கி இருக்கிறது ஒலிம்பிக்ஸ் எனக் குறிப்பிட்டுள்ளார் அவர்.

ஒலிம்பிக்ஸ் உலகின் சிக்கல்களைத் தீர்த்துவிடாது, தீர்க்கவும் முடியாது. ஆனால், அது மாற்றங்களுக்கான ஆய்வுக்களம். மனிதத்தின் அடுத்த மாடல் என்பதை நிரூபிக்கிறது. அது நமது சமூகநீதிச் சிந்தனைகளுக்கு நெருக்கமாக இருக்கிறது, என்பதும் கவனிக்கத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்





பொ.அ.செந்தில்குமார்

### தலைவரை வரவேற்றேன்!

ஒருங்கிணைந்த கோவை மாவட்டம், பொள்ளாச்சி நகரத்திற்கு ஆய்வு மேற்கொள்வதற்காக 6-7-2005 அன்று அப்போதைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் வருகை தந்திருந்தார். கே.கே.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கை தொடங்கி, ‘முரசொலி’ படிப்பதன் அவசியம் வரை பல்வேறு விஷயங்கள் குறித்துக் கேட்டறிந்தார். அப்போது, பொள்ளாச்சி நகர இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்த நான், அவரை வரவேற்று சிறப்பு செய்தேன்.

**– பொ.அ.செந்தில்குமார், துணை அமைப்பாளர், விவசாயத் தொழிலாளர் அணி, கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அனைவருக்குமான இயக்கம்!

1958-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 7 மற்றும் 8-ஆம் தேதிகளில் தென்னாற்காடு மாவட்டக் கழகத்தின் மூன்றாவது மாநாடு விருத்தாசலத்தில் நடைபெற்றது. தலைமையுரையாற்றிய மதுரை முத்துவின் பேச்சு, எழுச்சியை ஏற்படுத்தியது. “ஏழை எளியவர்களுக்கும், படித்த பட்டதாரிகளுக்கும், விவசாயி களுக்கும், சாதாரண மக்கள் அத்தனை பேருக்கும் தி.மு.கழகத்தில் இடமுண்டு. அதற்கேற்ற வகையில், அண்ணா அவர்கள் இயக்கத்தை அமைத்து இருக்கிறார்கள்” என அவர் ஆற்றிய உரை கவனிக்க வைத்தது.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 24

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

## பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்க ஒன்றுபடு!

சுவாமி அச்சூதானந்த்



ஆரிய சமாஜத்தின் மோசடிகளை அம்பலப்படுத்திய சுவாமி அச்சூதானந்த் ‘ஆதி இந்து இயக்கம்’ (ADI HINDU MOVEMENT) என்ற புதிய அமைப்பைத் தொடங்கினார். இந்தியாவின் ஆதிகுடிகள் தீண்டத்தகாத மக்கள் என்பதைக் குறிக்க **‘ஆதி இந்து’** என்று தன்னுடைய அமைப்புக்குப் பெயரிட்டார்.

“வெளியிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் கையாண்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர், மண்ணின் மைந்தர்களாகிய நம்மை ‘அரக்கர்கள்’ என்றும் ‘அசுரர்கள்’ என்றும் அழைத்தனர். நமது பண்பாட்டையும் நாகரிகத்தையும் அழித்து தீண்டத்தகாத வர்களாகவும், கீழ்சாதிகளாகவும் ஆக்கினார்கள். தொன்மையான சிந்து சமவெளி நாகரிகத்தில் ஆதிகுடிகள் வாழ்ந்தனர்” என்று தெளிவுறக் கூறினார் சுவாமி அச்சூதானந்த்.

சூத்திரர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பழங்குடியினர் ஆகிய மூவரின் ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில், ஆதி இந்து அமைப்பின் தத்துவத்தை வடிவமைத்தார். இன்றைய சுழலில் புரிந்துகொள்ளவேண்டுமெனில் எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி (S.C, S.T, O.B.C) மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தினார்.

சுவாமி அச்சூதானந்த் ஆதி இந்து இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன், டெல்லி, நாக்பூர், ஐதராபாத், மெட்ராஸ், பம்பாய் உள்ளிட்ட பெரு நகரங்களில் தேசிய மாநாடுகளையும், லக்னோ, கான்பூர், அலகாபாத், மீரட், ஆக்ரா உள்ளிட்ட இடங்களில் மாகாண மாநாடுகளையும், நூற்றுக்கணக்கான மாவட்ட அளவிலான மாநாடுகளையும் நடத்தினார். 1928-இல் பம்பாயில் நடைபெற்ற ‘ஆதி இந்து இயக்க மாநாட்டில்’ சுவாமி அச்சூதானந்த் டாக்டர் அம்பேத்கரை முதன்முறையாகச் சந்தித்தார்.

மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்துக்குப் பின்னர், ‘ஆதி இந்து மகாசபை’ ஆதி இந்து மக்களை ஒரு தனிமதமாக அங்கீகரிக்கக் கோரியது. சட்டமன்றத்தில் மட்டுமின்றி, அரசு நிர்வாகக் கட்டமைப்பின் ஒவ்வொரு மட்டத்திலும், கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் ஆதி இந்து மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கோரியது. 1926-இல் சுவாமி அச்சூதானந்த் ‘அச்சூத் மஞ்ச்’ என்ற அரசியல் அமைப்பை உருவாக்கினார். இவ்வமைப்பு அனைத்து நிர்வாக அமைப்புகளிலும், அரசு வேலைவாய்ப்பு களிலும் 18% இடஒதுக்கீடு கோரியது. தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள், கோரிக்கை மனுக்கள் ஆகியவற்றின் மூலம் இடஒதுக்கீடு, தனித்தொகுதிகளுக்கான தங்கள் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தியது.

**சுவாமி அச்சூதானந்த் தொடங்கிய ‘ஆதி இந்து இயக்கம்’ இந்தி பேசும் மாகாணங்களில் உருவாகிய முதல் தலித் இயக்கமாகும்.**

சுவாமி அச்சூதானந்த், காந்தியின் ஒத்துழை யாமை இயக்கத்தை எதிர்த்தார். தீண்டத்தகாத மக்களை **‘ஹரிஜன்’** என்று அழைப்பதை எதிர்த்தார். சுவாமி அச்சூதானந்த் இரு பிறப் பாளர்கள் என்று தங்களைக் கருதிக்கொள்ளும் உயர்ஜாதியினரின் நலனைப் பாதுகாக்கும் அமைப்பு என்று காங்கிரசைக் கடுமையாக விமர்சித்தார். பிரிட்டிஷாரைத் தீண்டத்தகாத மக்கள் எதிர்க்க வேண்டியதில்லை. பிரிட்டிஷ் ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு, தீண்டத்தகாத மக்கள் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தி னார்

சுவாமி அச்சூதானந்த் தொடங்கிய ‘ஆதி இந்து இயக்கம்’ இந்தி பேசும் மாகாணங்களில் உருவாகிய முதல் தலித் இயக்கமாகும். வட இந்தியாவின் தீண்டத்தகாத மக்களிடையே தலித் உணர்வு, பிராமண ஆதிக்க எதிர்ப்பு வளர்ச்சியடைந்ததில் சுவாமி அச்சூதானந் தருக்கும் ஆதி இந்து இயக்கத்துக்கும் குறிப்பிடத் தக்க பங்குண்டு. சுவாமி அச்சூதானந்த் தீண்டத்தகாத மக்களின் உணர்வெழுச்சியை அதிகரிக்கவும், பிராமணீயக் கதையாடல்கள் கூறும் கருத்துகளை எதிர்க்கவும், ஏராளமான நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதி னார்.

சமூக அநீதிகளை எதிர்க்க ஆன்மிகத்தைப் பயன்படுத்திய கபீர்தாசர், ரவிதாஸ் போன்ற அருவமும், உருவமும் அற்ற கடவுளை முன் வைத்த பக்தி இயக்க துறவிகளின் வரிசையில், சுவாமி அச்சூதானந்த் கடைசி நபர் எனலாம்.

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** 24

திராவிட இயக்கம் பயன்படுத்தும்
ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு.
அந்த மாநாடுகளின் வரலாற்றை
வாரம் ஒன்றாக வாசிப்போம்...

## அரசியல் போர் தொடங்கியது!

உலக வரைபடத்தை மாற்றியமைத்த முதல் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில்தான், தமிழ்நாட்டில் ஏற்றத்தாழ்வுகளை உடைத்தெறிந்து, உழைக்கும் மக்களின் உயர் வுக்குப் பாதை அமைத்த, திராவிட இயக்கத்தின் முன்னோடியான **‘நீதிக்கட்சி’** உருவெடுத்தது.

ஏற்றத்தாழ்வுகளின் மீது ‘சம்மட்டி அடி’ கொடுத்து, சமூகத்தைச் சமன்படுத்த நீதிக்கட்சி எடுத்த முதன்மையான ஆயுதம் கல்வி. நீதிக் கட்சியின் முதல் மாநில மாநாட்டில் இருந்தே அந்த முக்கியத்துவம் வெளிப்பட்டது. கோவை, ஆந்திரா, இராயலசீமா, நெல்லை, சேலம் உள்ளிட்ட பார்ப்பனரல்லாதோர் மாவட்ட மாநாடுகளை எழுச்சியோடு நடத்தி முடித்த கையோடு முதல் சென்னை மாகாண மாநாட்டை 28.12.1917-இல் கூட்டியது நீதிக்கட்சி.

சென்னை, அண்ணா சாலையில் இயங்கிய வெலிங்டன் திரையரங்கில் மாநாடு கூட்டப்பட்டிருந்தது. பல ஜமீன்தார்கள், செல்வாக்குமிக்க நபர்கள் மாநாட்டுக்கு வருகை புரிந்திருந்தனர். திரையரங்கம் நிரம்பி, வெளியேயும் கால் வைக்க முடியாத அளவுக்கான கூட்டம். அனைவரையும் வரவேற்கும் பொறுப்பை சர் பிட்டி.தியாகராயர் ஏற்றிருந்தார். ஆனால், உடல்நலம் குன்றியிருந்த காரணத்தால், தியாகராயரின் வரவேற்புப் பேருரையை திருமலைப்பிள்ளை வாசித்தார். நூற்றாண்டுக்கு முன்பு தமிழ்ச் சமூகத்தின் நிலைமை அரசியல் - கல்வி - பொருளாதாரம் - வேலைவாய்ப்பு ஆகியவற்றில் என்னவாக இருந்தது என்பதற்கான காலக்கண்ணாடியாக இருந்தது தியாகராயரின் உரை.

“கல்வியில் பார்ப்பனர்களைவிட மிக மோசமான நிலையில் நாம் இருக்கிறோம். கைத்தொழில், வர்த்தகத்திலும் தாழ்ந்தே இருக்கிறோம். விஞ்ஞானத்தில் வளர்ச்சியடைய வில்லை. கப்பல் கட்டும் தொழிலை அறவே மறந்துவிட்டோம். பொது ஸ்தாபனங்களில், அரசியல் நிர்வாகத்தில் பின்தங்கி இருக்கிறோம். வக்கீல்கள் ஹோதாவிலும், நிர்வாக உத்தியோகங்களிலும் பார்ப்பனர்கள் நம்மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். பார்ப்பன சகோதரர்கள் நம் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை போடுகிறார்கள். பார்ப்பனரல்லாத மக்களின் அரசியல் முன்னேற்றம் படிப்படியாகவும் உறுதியாகவும் இருக்க, வேண்டும். சட்ட சபைகளில் பார்ப்பனரல்லா தோருக்கு பிரதிநிதித்துவம் வேண்டும். எல்லா சமூகங்களும் உரிமைபெறும் பொருட்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்” என்று கூட்டத்தினரின் உணர்வுகளைத் தட்டியெழுப்பினார் தியாகராயர்.

ஆரம்பக் கல்வி, விவசாயக் கல்வி, தொழில் கல்வி, பொது ஸ்தாபனங்களில் திராவிட மக்கள் அடைய வேண்டிய வளர்ச்சி குறித்து மிக அழகாக விவரித்திருந்தார் தியாகராயர்.

**இரண்டாவது நாளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், ரயில்வே பணிகள், ஸ்தல ஸ்தாபனங்கள், கைத்தொழில் முன்னேற்றம் உட்பட 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

வரவேற்புரை முடிந்ததும் வெங்கடகிரிராஜா மாநாட்டுக்குத் தலைமை ஏற்குமாறு, இளவரசனேந்தல் ஜமீன்தார் முன்மொழிந்து மாலை அணிவித்தார். திவான் பகதூர் கோபன் நாராயணசாமி செட்டியார், வாழ்த்துத் தந்திகளை வாசித்த பின்பு, செல்லப்பள்ளி குமாரராஜா தலைமையுரை ஆற்றினார். “அரசியல் போர் ஆரம்பமாகிவிட்டது. தளராது உழையுங்கள். வெற்றி காணும்வரை முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் ஆயுட் காலத்தில் உங்கள் சமூக உரிமைகள் ஒப்புக் கொள்ளப்படாமல் போகலாம். ஆனால் உங்கள் பின்னோராவது (எதிர்கால தலைமுறை) அடைவது நிச்சயம்” என்று சூளுரைத்தார் குமாரராஜா.




ஓவியம் : சிகரன்


இரண்டாவது நாளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், ரயில்வே பணிகள், ஸ்தல ஸ்தாபனங்கள், கைத்தொழில் முன்னேற்றம் உட்பட 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, அரசியல் முன்னேற்றம் குறித்த இரண்டாவது தீர்மானத்தை வாசித்து, டி.எம்.நாயர் ஆற்றிய சொற்பொழிவு, பார்ப்பன ரல்லாதோரின் அரசியல் எழுச்சிக்கான அரிச்சுவடியாக இருந்தது. இரண்டே ஆண்டு களில் அதிகாரத்தை அடையவும் வழிகோலியது.

**...கூட்டம் திரளும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

569

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131